भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, सोमवार, 6 मई, 2002/1924 सका

New Delhi, Monday, 6th May, 2002/1924 Saka

புது தில்லி, 2002 மே 6, திங்கட்கிழமை / 1924 சக

## Ministry of Law, Justice and Company Affairs

**(Legislative Department)**

New Delhi, 6th May 2002.

**சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்**
**(சட்டமியற்றுத் துறை),**
**புதுதில்லி, 6 மே 2002.**

The translation in Tamil of The Commission of Sati (Prevention) Act, 1987 (3 of 1988), The Child Labour (Prohibition and Regulation) Act, 1986 (61 of 1986), The Prevention of Cruelty to Animals Act, 1960 (59 of 1960), The Persons with Disabilities (Equal Opportunities, Protection of Rights and Full Participation) Act, 1995 (1/1996) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

உடன்கட்டை ஏறுதல் (தடுப்பு) சட்டம், 1987 (3/1988), குழந்தைத் தொழில் (தடை மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 (61/1986), விலங்குகள் கொடுமை தடுப்புச் சட்டம், 1960 (59/1960), ஊனமுற்றோர் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்கேற்பு) சட்டம், 1995 (1/1996) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[ Price : Rs. 53.00

## ஊனமுற்றோர் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்கேற்பு) சட்டம், 1995

(சட்ட எண் 1/1996)

[1996, ஜனவரி 1]

ஆசிய-பசிபிக் மண்டலத்திலுள்ள ஊனமுற்ற மக்களுக்கு முழுப் பங்கேற்பு மற்றும் சமத்துவம் அளிப்பதற்கான சாற்றாணைக்கு செயல் விளைவு அளிக்கும் ஒரு சட்டம்.

1992 ஆம் ஆண்டு டிசம்பர் 1ஆம் நாள் முதல் 5ஆம் நாள் வரையில் பெய்ஜிங் நகரில் நடைபெற்ற ஆசிய-பசிபிக் பொருளாதார-சமூக ஆணையத்தால் கூட்டப்பட்ட ஊனமுற்றோரின், ஆசிய-பசிபிக் 1993—2002 பத்தாண்டினைத் தொடங்கி வைப்பதற்கான கூட்டத்தில் ஆசிய-பசிபிக் மண்டலத்திலுள்ள ஊனமுற்ற மக்களுக்கு முழுப் பங்கேற்பு மற்றும் சமத்துவம் அளிக்கும் சாற்றாணை ஏற்று மேற்கொள்ளப்பட்டிருப்பதாலும் ;

மற்றும் மேற்சொன்ன சாற்றாணையில் இந்தியா கையொப்பமிட்ட தரப்பினராக இருப்பதாலும் ;

மற்றும் மேற்சொன்ன சாற்றாணையைச் செயற்படுத்துவது தேவையெனக் கருதப்படுவதாலும் ;

இந்தியக் குடியரசின் நாற்பத்தியாறாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :—

### அத்தியாயம் I

### முன்னுரை

குறுந்தலைப்பு அளாவுகை, மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், ஊனமுற்றோர் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப்பங்கேற்பு) சட்டம், 1995 என வழங்கப்பெறும்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசு அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியன்று நடைமுறைக்கு வரும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) ''உரிய அரசு '' என்பது,—

(i) மைய அரசை அல்லது அந்த அரசால் முழுவதுமாகவோ கணிசமான அளவிலோ நிதியுதவியளிக்கப்படும் நிறுவனம் எதனையும் பொறுத்தவரை அல்லது பாளையச் சட்டம், 1924இன்படி அமைக்கப்பட்ட பாளையக் குழுமம் ஒன்றைப் பொறுத்தவரை, மைய அரசு என்று பொருள்படும் ;

(ii) மாநில அரசு ஒன்றை அல்லது அந்த அரசால் முழுவதுமாகவோ கணிசமான அளவிலோ நிதியுதவியளிக்கப்படும் நிறுவனம் எதனையும் பொறுத்தவரை அல்லது பாளையக் குழுமமாக இல்லாத பிற உள்ளாட்சி அதிகார அமைப்பு எதனையும் பொறுத்தவரை, மாநில அரசு என்று பொருள்படும் ;

(iii) மைய ஒருங்கிணைப்புக் குழுவையும் மைய நிருவாகக் குழுவையும் பொறுத்தவரை, மைய அரசு என்று பொருள்படும் ;

(iv) மாநில ஒருங்கிணைப்புக் குழுவையும் மாநில நிருவாகக் குழுவையும் பொறுத்தவரை, மாநில அரசு என்று பொருள்படும் ;

(ஆ) ''பார்வையின்மை'' என்பது, நபர் ஒருவர், பின்வரும் நிலைமைகளில் ஏதொன்றாலும் பாதிக்கப்பட்ட நிலைமையைக் குறிப்பதாகும். அவையாவன :—

(i) கண் பார்வை முற்றிலும் இல்லாதிருத்தல் ; அல்லது